**தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் - 2022**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிறுவனம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.
இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.
- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.
- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது

நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிறுவனத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- நிறுவனத்தின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- நிறுவனத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

| | உரிய நியமங்களின் தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்ட கிரயம் ரூபா 70.78 மில்லியன் ஆன 09 மோட்டார் வாகனங்கள், ரூபா 271.93 மில்லியன் ஆன ஆய்வுகூட உபகரணங்கள் மற்றும் ரூபா 42.59 மில்லியன் ஆன அலுவலக | சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்தல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், 2023 பெப்ரவரி 28 ஆம் திகதி வரையில் பூர்த்தி செய்ய முடியாதிருந்தது. அதனால் 2023 இன் | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உபகரணங்கள் பயன்படுத்தப்பட்டுக் கொண்டிருந்த போதிலும், பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் அந்த சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் மீண்டும் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இறுதி கணக்குகளில் தேவையான சீராக்கங்களை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 69 வது பந்தியின் பிரகாரம் சொத்தொன்றை பெறுமானத் செய்தல் ஆரம்பிக்கப்படுவது அது பயன்பாட்டிற்காக தயார் நிலையில் கொண்டுவரப்பட்டதன் பின்னர் ஆகும். ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையின் மூலம் வழங்கப்பட்டிருந்த ரூபா 56.47 மில்லியன் ஆன சொத்துக்கள் 2022 நவம்பர் 15 ஆம் திகதி ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த சொத்துக்களுக்காக 2022 சனவரி 01 ஆம் திகதி முதல் பெறுமானத் தேய்வு செய்யப்பட்டதன் காரணமாக ரூபா 9.90 மில்லியன் பெறுமானத் தேய்வு செலவினம் அதிகரித்து காண்பிக்கப்பட்டதுடன், ஆண்டின் மிகை அப்பெறுமதியால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | இந்த சொத்துக்கள் 2021 ஆம் ஆண்டில் கிடைத்தமையால் 2022.01.01 ஆம் திகதி முதல் பெறுமானத் தேய்வு ஆரம்பிக்கப்பட்டிருந்தது. எனினும், உரிய சொத்துக்கள் 2022.11.15 ஆம் திகதி முதலே பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டமையால் அத்திகதி முதல் பெறுமானத் தேய்வு செய்து தேவையான சீராக்கங்கள் 2023 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்படும். | நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் போது பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2016 ஆம் ஆண்டு முதல் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்ட ரூபா 2.9 மில்லியன் கணனி மென்பொருள் (Computer Software) மற்றும் ரூபா 1.40 | நிதி நிலைமைக் கூற்றில் இதன் மூலம் தாக்கமொன்று ஏற்படாதிருந்தமையால் 2023 ஆம் ஆண்டின் போது சீராக்குவதற்கு அவசியம் இல்லை. | சொத்துக்கள் மற்றும் அவற்றின் பெறுமானத் தேய்வு சரியான காலப்பகுதியின் பிரகாரம் கணக்கீடு |

| | | | |
|---|---|---|---|
| | மில்லியன் ஆன ஆய்வுகூட உபகரணங்கள் என்பன மீளாய்வாண்டின் சொத்தாக இனங்காணப்பட்டிருந்ததுடன், அந்த அளவிற்கும் பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருந்தது. இது முன்னைய ஆண்டின் சீராக்கமாக காண்பிக்கப்பட வேண்டிய போதும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | செய்தல் வேண்டும். |
| (ஆ) | மோட்டார் போக்குவரத்து திணைகளத்தில் வாகன புகை நம்பிக்கை பொறுப்பு நிதியத்தால் 2020 நவம்பர் 20 ஆம் திகதி தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்ட ரூபா 41.38 மில்லியன் பெறுமதியான நடமாடும் வாயு தர மேற்பார்வை அலகு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அதற்குரிய பெறுமானத் தேய்வு சீராக்கமும் மேற்கொள்ளப்படவில்லை. | மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தில் இருந்து கிடைத்த நடமாடும் வாயு தர மேற்பார்வை அலகு அதனுடன் கிடைத்த லொறி வண்டியில் பொருத்தப்பட்டிருந்ததுடன், லொறி வண்டியின் உரித்து இது வரையிலும் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்திற்கு கையளிக்கப்படாமையின் காரணமாக அந்த மேற்பார்வை அலகும் 2022 ஆம் ஆண்டில் சொத்துக்களுக்கு எடுக்கப்படவில்லை. 2023 ஆம் ஆண்டின் போது அந்த அலகை சொத்துக்களில் உள்ளடக்கி தேவையான சீராக்கங்களை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்கள் மற்றும் அவற்றின் பெறுமானத் தேய்வுகளை சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (இ) | உரிமை மாற்றல் கூற்றில் சொத்துக்கள் கைப்பற்றல்காக முன்னைய ஆண்டு கொண்டுவரப்பட்டிருந்த ரூபா 2.26 மில்லியனை இனங்காணாத மீதியை கண்டறிவதற்கு நடவடிக்கை எடுக்காமல் அரசாங்கத்தினதும், ஏனைய நிறுவனங்களினதும் மூலதன பங்களிப்பு கணக்கிற்கு (Capital Contirubuted by Government & Other Entities) | இந்த மீதியில் 16 வருடங்களுக்கு முன்னர் இருந்து கணக்குக் கூற்றுக்களில் சொத்துக்கள் கைப்பற்றுவதற்கு கிடைத்த மானியமாக காண்பிக்கப்பட்டிருந்தது. அந்த அடிப்படையில் அந்த மீதி மூலதன கணக்கில் சீராக்கப்பட்டிருந்தது. இதன் மூலம் நிதி நிலைமைக் கூற்றில் தாக்கம் ஏற்பட்டிருக்கவில்லை. | இனங்காணப்படாத மீதிகளை சரியாக இனங்கண்டு கணக்கு வைத்தல் வேண்டும். |

சீராக்கப்பட்டிருந்தது.

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | நிறுவனத்தின் மாவட்ட அலுவலகங்களில் பிரதான அலவலகத்திற்கு அனுப்பப்பட்ட ரூபா 3.73 மில்லியன் இனங்காணப்படாத பெறுவனவை சரியாக இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் நிறுவனத்தின் நானாவித வருமானமாக காண்பிக்கப்பட்டிருந்தது. | இந்த இனங்காணப்படாத அனுப்புதல்கள் எந்தவொரு வகையிலும் இனங்காணப்படாமல் நிறுவனத்தின் நடைமுறைக் கணக்கில் செலவு வைத்து அனுப்பப்பட்டிருந்தது. இது தொடர்பாக மக்கள் வங்கியில் விசாரணை செய்யப்பட்ட போதும் வங்கியும் அதனை இனங்காண்பதற்கு தவறியிருந்தது. அமைச்சின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் மூலமும் நிறுவனத்தின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் மூலமும் இந்த இனங்காணப்படாத அனுப்புதல்களை வருமானத்திற்கு எடுப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அந்த மீதி வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | இனங்காணப்படாத மீதிகளை சரியாக இனங்கண்டு கணக்கு வைத்தல் வேண்டும். |

**1.5.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்**

| விடயம் | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி ரூபா. மில்லியன் | நேரொத்த அறிக்கையின் பிரகாரம் பெறுமதி ரூபா. மில்லியன் | வேறுபாடு ரூபா. மில்லியன் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| நிலைப்படுத்தல் முறைமை மூலம் மண்சரிவு ஆபத்துக்களை குறைக்கும் செயற்திட்டத்தின் மூலம் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்திற்கு கிடைக்க வேண்டிய கடன் மீதி | 136.96 | 133.18 | 3.78 | 2023 இன் நிதிக் கூற்றுக்களில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக் கூற்றுக்களில் சரியான சீராக்கங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்.**

**1.6.1 முற்பணம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2015 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை ஒப்பந்தகாரர்களுக்கு முற்பணமாக செலுத்தப்பட்ட ரூபா 18.68 மில்லியன் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. இதனிடையே ரூபா 5.66 மில்லியன் மீதி 2017 ஆம் ஆண்டிற்குரிய மீதியாகும். | இந்த முற்பணங்களில் ரூபா 5,755,130 தொகை செலுத்தப்பட்டிருந்த ஒப்பந்தகாரர் ஒப்பந்தத்தை கைவிட்டு சென்றிருந்தார். அவரிடம் இருந்து அறவிட வேண்டிய முற்பணத்தை பெற்றுக் கொள்வதற்கு பிணைமுறி வழங்கிய காப்புறுதி கம்பனியில் இருந்து பெற்றுக்கொள்வதற்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது. அந்த பணம் கிடைத்த பின்னர் உரிய சீராக்கங்களை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மிகுதி முற்பண தொகையான ரூபா 12,821,316.80 புதிய ஆய்வுகூடத்தை நிர்மாணிப்பதற்காக ஒப்பந்தகாருக்கு செலுத்தப்பட்டுள்ள முற்பணம் பட்டியலில் இருந்து அறவிடப்பட்தன் பின்னர் முற்பண கணக்கிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஒப்பந்தகாரருக்கு செலுத்தப்பட்டுள்ள முற்பண தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமைகள் | பெறுமதி | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | | | ரூபா. மில்லியன் | | |
| (அ) | அரச நிதி திணைக்களத்தின் 2000 சனவரி 11 ஆம் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கையின் | அமைச்சரவை அல்லது அரச நிர்வாக அமைச்சு அல்லது பொதுத் | 9.02 | வருகை மற்றும் செயலாற்றலை அடிப்படையாகக் கொண்டும் ஊக்குவிப்பு படி திட்டமொன்று 2013 ஆம் ஆண்டின் போது | உரிய அங்கீகாரத்தை பெற்று கொடுப்பனவுகளை செலுத்துதல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 02 ஆம் பந்தி மற்றும் 1994 யூன் 04 ஆம் திகதிய இலக்கம் 05 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கை. | திறைசேரியின் அங்கீகாரம் பெறப்படாமல் 2022 ஆம் ஆண்டின் சனவரி முதல் ஏப்ரல் வரை நிறுவனம் ஊக்குவிப்பு படி செலுத்தியிருந்தது. | | அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. இந்த ஊக்குவிப்பு படிகளின் காரணமாக நிறுவனத்தின் ஊழியர்களின் வருகை மற்றும் செயலாற்றலை வருடாவருடம் உயர் மட்டத்தில் குறிப்பிட்டுக் கூறக்கூடியதாக இருந்தது. எனினும், தேசிய வரவு செலவு திட்ட சுற்றறிக்கை இலக்கம் 03/2022 என்ற 2022.04.26 ஆம் திகதிய சுற்றறிக்கையின் எல்லையின் பிரகாரம் அந்த படிகளை செலுத்துதல் 2022 ஏப்ரல் மாதத்தின் பின்னர் தற்காலிகமாக நிறுத்தி எதிர்காலத்தில் பொது முயற்சிகள் திணைக்களத்தில் இருந்து இது தொடர்பான அங்கீகாரத்தை பெற்று மீண்டும் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | |
| (ஆ) | 2021 திசெம்பர் 28 ஆம் திகதிய கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் தீர்மானம். | செயற்திட்ட சேவைகளுக்காக படியினை செலுத்தும் போது உள்ளக முகாமைத்துவ குழுவின் அங்கீகாரம் பெற்று முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற வேண்டியிருந்தமை | 2 | பொறியியல் மற்றும் புவியியல் விஞ்ஞானிகளின் விஷேட பணிகளுக்காக அந்த பதவிகளுக்கு படியொன்று ஒப்பந்தம் கையளித்த நிறுவனத்தால் செலுத்தப்படுகின்றது. இந்த செயற்பாடுகளுக்காக விஷேட நபர்கள் வெளியில் இருந்து சேர்க்கப்படுமாயின் அதற்காக கணிசமான | உரிய அங்கீகாரத்தை பெற்று கொடுப்பனவுகளை செலுத்துதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு தீர்மானித்திருந்த போதிலும், அவ்வாறு அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் ரூபா 02 மில்லியன் விஷேட படி கணக்கில் வரவு வைக்கப்பட்டு செலுத்த வேண்டிய படியாக கணக்கில் (Provision to Project Staff) செலவு வைக்கப்பட்டிருந்தது. | சம்பளம் ஒன்றை செலுத்துவதனால் நிறுவனத்திற்கு பெறக் கூடியதாக இருந்த இலாபம் மிகவும் குறைவாகும். அந்த ஆலோசனை சேவைகள் உரிய பிரகாரம் பொறுப்புடன் மற்றும் பொதுவான கடமை காலத்தை விஞ்சி நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தமை, செயற்திட்டத்தை வெற்றிகரமாக பூர்த்தி செய்வதற்கு பங்களித்தல் மற்றும் அவர்களின் நிபுணத்துவ அறிவுக்கு சமமான படியொன்றை செலுத்துதல் போன்ற விடயங்களை கவனத்தில் கொண்டு சம்பளத்தில் 1/3 செலுத்துதலை அடிப்படையாகக் கொண்டு படி செலுத்துவதற்கு உள்ளக முகாமைத்துவ குழுவினாலும் வழங்கப்பட்ட அங்கீகாரத்தின் கீழ் இந்த படிகளை செலுத்துவதற்கு ஒதுக்கீடுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 266,985,728 மிகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 70,461,437 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 196,524,291 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு நடைமுறையல்லா வருமானம் ரூபா 178,504,297 இனாலும், மானியங்கள் மூலம் கிடைத்த சொத்துக்களின் பெறுமானத் தேய்வு ரூபா 15,066,452 இனாலும், செயற்திட்ட முகாமைத்துவ பிரிவின் மிகை ரூபா 19,140,828 இனாலும், மனித குடியிருப்பு திட்டங்கள் மற்றும் ஆராய்ச்சி பிரிவின் மிகை ரூபா 826,111 இனாலும் புவி தொழில்நுட்ப மற்றும் பொறியியல் பிரிவின் மிகை ரூபா 14,730,579 இனாலும், சுற்றாடல் ஆய்வு மற்றும் சேவைப் பிரிவின் மிகை ரூபா 1,385,038

இனாலும் மண் சரிவு ஆராய்ச்சி மற்றும் இடர் முகாமைத்துவ பிரிவின் மிகை ரூபா 9,829,025 இனாலும் அதிகரித்தமை பிரதான காரணங்களாக இருந்தன.

**2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களின் முக்கிய பகுப்பாய்வு**

**2.2.1 ஆராய்ச்சி நிறுவனத்தின் ஒவ்வொரு பிரிவுகளினதும் மிகையினை 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது அதிகரித்தமை அல்லது வீழ்ச்சியடைந்தமை.**

புவி தொழில்நுட்பம் மற்றும் பொறியியல், செயற்திட்ட முகாமைத்துவம் போன்ற பிரிவுகளின் மிகை 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2022 ஆம் ஆண்டில் முறையே 27 சதவீதம் மற்றும் 223 சதவீத அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. மனித குடியிருப்பு திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சி, மண்சரிவு ஆராய்ச்சி மற்றும் இடர் முகாமைத்துவம், சுற்றாடல் ஆய்வு மற்றும் சேவைகள், கட்டிடப்பொருட்கள் போன்ற பிரிவுகளின் மிகை 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2022 ஆம் ஆண்டில் முறையே 90, 60, 91 மற்றும் 182 சதவீத வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிறுவனத்திற்காக சட்ட ரீதியான நிலையை கையளிப்பதற்காக சட்டமொன்று தயாரிப்பதற்கு சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை குறிப்பிற்காக 2021 ஒக்டோபர் 12 ஆம் திகதி அங்கீகாரம் கிடைத்திருந்தது. அதன் பிரகாரம் தயாரிக்கப்பட்ட சட்ட வரைவு 2022 செப்டம்பர் 26 ஆம் திகதி சட்ட வரைவு திணைக்களத்தால் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்ட போதிலும், அந்த சட்டம் தயாரித்து பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டு 30 வருடங்கள் அளவிலான காலம் கடந்திருந்த போதும் சட்ட ரீதியான நிலையை கையளிப்பதற்காக சட்டம் ஒன்றை அங்கீகரித்துக் கொள்வதற்கு நிறுவனத்திற்கு முடியாதிருந்தது. | நிறுவனத்திற்காக சட்ட ரீதியான நிலையை கையளிப்பதற்காக சட்டமொன்றை தயாரிப்பதற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த அமைச்சரவை குறிப்பிற்காக 2021 ஒக்டோபர் 12 ஆம் திகதி அங்கீகாரம் கிடைத்திருந்தது. அதன் பிரகாரம் தயாரிக்கப்பட்ட சட்ட வரைவு 2022 செப்டம்பர் 29 ஆம் திகதி சட்டமா அதிபர் திணைக்களத்தால் சட்ட வரைவு திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருந்ததுடன், அத்தியாவசிய சில பணிகள் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் விடயப் பரப்பை உள்ளடக்குவதை நோக்காகக் கொண்டு சட்டமா அதிபர் திணைக்களத்தின் மூலம் கலந்துரையாடல் ஒன்று 2023.03.02 ஆம் திகதி நடாத்தப்பட்டுள்ளதுடன், இறுதி பரிந்துரைகள் விரைவாக வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | விரைவாக சட்டத்தை அங்கீகரித்துக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மண்சரிவு விபத்து பிரிவுகளை விநியோகிப்பதற்காக கணக்காய்வு திகதியான 2022 செப்டம்பர் 15 ஆம் திகதியில் ஆபத்துக்களுடன் உள்ள 14 மாவட்டங்களில் 330 தானியங்கி மழை மாணிகள் ஸ்தாபிக்கப்பட்டிருந்ததுடன் , அதில் 72 செயலிழந்து காணப்பட்டது. மழை மாணி முறைமை பிரதான அலுவலகத்தில் இருந்து பராமரித்துச் செல்கின்றமையால் ஊழியர் பற்றாக்குறை மற்றும் ஏனைய விடயங்களின் காரணமாக உரிய முறையில் பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. தானியங்கி மழை மாணி முறைமைகளில் தரவு உள்ளடக்கத்தில் ஏற்படுகின்ற நெருக்கடிகளையும் சரியாக முன்னரே மண் சரிவு அனர்த்தங்களை மதிப்பிட்டு அறிவித்தல் தொடர்பில் தாக்கம் ஏற்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | மண் சரிவு அபாயம் உள்ள மாவட்டங்களில் நீர்த்தேக்க பிரதேசங்களில் ஸ்தாபிக்கப்பட்ட தானியங்கி மழை மாணியை தொடர்புபடுத்தும் வலைப்பின்னல் ஒன்றின் மூலம் நிகழ்நேர மழைவீழ்ச்சி தரவு பெறப்படுகின்றது. 14 மாவட்டங்கள் முழுவதும் ஸ்தாபிக்கப்பட்டுள்ள மழை மாணிகளில் ஏதாவது எண்ணிக்கையொன்று செயலிழந்திருந்த போதிலும், வளிமண்டலவியல் திணைக்களத்தால் வழங்கப்படுகின்ற காநிலை எதிர்கூறல் மற்றும் அண்மையில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள மழை மானியை பயன்படுத்தி விஞ்ஞான ரீதியான முறைமையொன்றின் பிரகாரம் ஆபத்துக்களின் எதிர்கூறலை விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிந்தது. | தானியங்கி மழை மாணி முறைமையை சரியான முறையில் பராமரித்துச் செல்லல் வேண்டும். |
| (ஆ) | இலங்கையில் நகர பிரதேசங்களில் வளியின் தரத்தை கண்காணிக்கும் நடவடிக்கைகளுக்காக அதிக தொழில்நுட்ப தானியங்கி நடமாடும் வளியின் தரத்தை மேற்பார்வை செய்யும் பிரிவொன்று 2019 ஏப்ரல் 01 ஆம் திகதி மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தால் தேசிய | 2019 ஏப்ரல் 01 ஆம் திகதி மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் மூலம் நடமாடும் வளியின் தரத்தை மேற்பார்வை செய்யும் அலகு தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்திற்கு 2020.11.20 முதல் கிடைத்திருந்தது. எனினும், அந்த அலகு அமுல்படும் நிலைமையில் பேணிச் செல்வதற்கு தேவையான நிதிஏற்பாடு | கொழும்பு மாநகர சபை வளவிலும், ஏனைய நகர பிரதேசங்களிலும் சேவையை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. நடமாடும் வளியின் தரத்தை மேற்பார்வை அலகுடன் WPLO-3426 என்ற லொறி வண்டி கொழும்பு மாநகர சபை வளவில் 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன், அதன் மூலம் பெறப்படுகின்ற தரவுகள் மாநகர சபையின் வளவிற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. ஏனைய நகர பிரதேசங்களில் சேவை வழங்கப்பட்டிருக்கவில்லை . | இல்லாமையினால் அது வரையில் நாங்கள் இந்த உபகணரங்களை பயன்படுத்தப்படாமல் வைப்பதால் அவற்றில் இருந்து ஏற்படக் கூடிய இழப்புக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் அந்த உபகரணங்களை பயனுள்ளதாக பயன்படுத்துதல் என்ற காரணங்களின் அடிப்படையில் கொழும்பு மாநகர சபையின் இணக்கப்பாட்டுடன் அந்த நடமாடும் வளியின் தரத்தை மேற்பார்வை செய்யும் அலகு கொழும்பு மாநகர சபை வளவில் பூரண பாதுகாப்புடன் ஸ்தாபிக்கப்பட்டு 2020 மார்ச் மாதம் முதல் தரவினை பெற்றுக்கொள்வதற்கு செயற்பாடுகள் அமைக்கப்பட்டிருந்தது. | |

## 3.3 நிதியத்தின் குறைவான பயன்பாடு

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இரத்தினபுரி மற்றும் களுத்துரை மாவட்ட அலுவலகங்களை நிர்மாணிப்பதற்கு 2019 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை பொதுத் திறைசேரியில் இருந்து ரூபா 143 மில்லியன் வழங்கப்பட்டிருந்ததுடன், அதில் 60.52 மில்லியன் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது. இரத்தினபுரி மாவட்ட அலுவலகம் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன், களுத்துறை மாவட்ட அலுவலகம் நிர்மாணிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | களுத்துறை மாவட்டத்திற்காக உத்தேசிக்கப்பட்ட தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆய்வுகூட கட்டிடத்தை நிர்மாணிக்கும் நடவடிக்கைகள் 2021 ஆம் ஆண்டில் ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்ட போதிலும், காணிப்பகுதி தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்திற்கு கையளிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமையினால் திட்டமிடப்பட்ட பிரகாரம் அதன் நிர்மாண நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு முடியாதிருந்தது. மேலும் இரண்டு வருட காலத்திற்காக அரசாங்கத்தின் கட்டிடங்களை நிர்மாணித்தல் தற்காலிகமாக கைவிடுவதற்கு அரசினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரமும் மேற்கூறப்பட்ட கட்டிடத்தை நிர்மாணிக்கும் | நிதிஏற்பாட்டில் இருந்து உரிய நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக பயன்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | நடவடிக்கைகள் தற்காலிகமாக கைவிடப்பட்டிருந்தது. எனினும், தற்போது அந்த கட்டிடத்தை நிர்மாணத்திற்குரிய வடிவமைப்பு திட்டம் மற்றும் அதற்குரிய உட்கட்டமைப்பு திட்டங்களை நிர்மாணித்தல் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. | |
| (ஆ) | தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் தொழில்நுட்ப பங்களிப்பில் அதிக ஆபத்துள்ள வலயங்களில் வாழ்கின்ற நபர்களை பாதுகாப்பான பிரதேசங்களில் குடியமர்த்தும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 14 மாவட்டங்களில் 1000 குடும்பங்களுக்காக வீடுகளை நிர்மாணிப்பதற்கு முன்னைய ஆண்டுகளில் கிடைத்த நிதிஏற்பாடு ரூபா 28.07 மில்லியன் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது. | இடர் உதவி சேவை நிலையத்தினால் அதிக ஆபத்துள்ள வலயங்களில் வாழ்கின்ற நபர்களை பாதுகாப்பான இடங்களில் மீண்டும் குடியமர்த்தும் செயற்திட்டம் அமுல்படுத்தப்படுவதுடன், தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தனால் தேவையான தொழில்நுட்பட பங்களிப்பு வழங்குதலும் இடம் பெறுகின்றது. | நிதிஏற்பாடு வழங்கப்பட்ட பணிகைளை உரிய வகையில் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | இலங்கை இரசாயன ஆபத்துக்கள் ஒழுங்கு முறையாக மதிப்பீடு செய்தல் (Systemetic Diagnostic Assessment of Chemical Disaster Risk in Sri Lanka) செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டில் பொதுத் திறைசேரியில் இருந்து ரூபா 05 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்ததுடன், ஆண்டின் ஆரம்பத்தில் ரூபா 2.32 மில்லியன் முன்னைய ஆண்டின் நிதி ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் ஆண்டின் நிதிசார் செயல்முன்னேற்றம் ரூபா 4.25 மில்லியன் ஆக | இந்த செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்காக தரப்பினர்களின் இறுதி கூட்டத்தை ஒழுங்கமைப்பதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன், இலங்கையின் இரசாயான இடர் ஆபத்துக்களை முகாமைத்துவம் செய்வதற்காக தொடர்புடைய பல்வேறு தரப்பினர்களுக்கு தயாரிக்கப்பட்ட திட்ட முறைமை, அதன் உபகணரங்கள் மற்றும் தர ஒழுங்கமைப்பு அட்டவணைகளை அறிமுகப்படுத்தும் போது அதுக்குத் தேவையான கொள்கை அல்லது உபாயத் திட்டங்களை சமர்ப்பித்தல் மற்றும் மீண்டும் மீளாய்வு செய்தல் 2023 ஆம் ஆண்டின் ஆரம்ப அரைப்பகுதியில் | நிதிஏற்பாட்டை வழங்கிய பணிகளை திட்டமிடப்பட்ட முறையில் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| இருந்ததுடன், ரூபா 3.07 மில்லியன் குறைவாக பயன்படுத்தப்பட்டிருந்தது. 2021 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் பூர்த்தி செய்தவற்கு நிர்ணயிக்கப்பட்ட இந்த செயற்திட்டம் 2022 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்தினை பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | |

## 3.4 செயற்திட்டம் அல்லது மூலதன வேலைகளில் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மண்சரிவு ஆபத்துக்களை குறைக்கும் செயற்திட்டத்தை குறைப்பதற்காக 2022 ஆம் ஆண்டிற்காக ரூபா 10 மில்லியன் நிதிஏற்பாடு கிடைத்திருந்தது. நிறுவனத்தால் ரூபா 3.77 மில்லியன் செயற்திட்டத்திற்காக பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், ரூபா 6.23 மில்லியன் தொகை குறைவாக பயன்படுத்தப்பட்டிருந்தது. அது கிடைத்த நிதிஏற்பாடுகளில் 62 சதவீதம் ஆகும். கடந்த ஆண்டில் மண்சரிவை குறைக்கும் செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக ரூபா 150 மில்லியன் நிதிஏற்பாடு கிடைத்திருந்த போதிலும், ரூபா 101.55 மில்லியன் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது. மேற்கூறப்பட்ட நிதிஏற்பாடுகளை பயன்படுத்தி 2022 ஆகஸ்ட் 14 ஆம் திகதியில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த கொட்டஹெரகந்த செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்ட போதும் ஆண்டு முடிவடையும் வரையிலும் அதன் பௌதீக செயல்முன்னேற்றம் 62 சதவீதம் ஆகும். | மண்சரிவு ஆபத்தை குறைக்கும் செயற்திட்டத்திற்கான கட்டுநிதியாக ரூபா 10 மில்லியன் மாத்திரம் 2022.12.19 ஆம் திகதி கிடைத்திருந்தது. அதனால் அந்த செயற்திட்டத்திற்காக திட்டமிடப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு போதியளவான காலம் காணப்படவில்லை. 2021 ஆம் ஆண்டில் மண்சரிவு ஆபத்து செயற்திட்டத்திற்காக கிடைத்த ரூபா 150 மில்லியன் தொகைக்கும் உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன், அதில் ரூபா 140.67 மில்லியன் 2022.12.31 ஆம் திகதி வரையில் செலுத்தப்பட்டுள்ளது. மேலும் 2023.04.11 ஆம் திகதி வரையில் அதன் செயல் முன்னேற்றம் ரூபா 142.9 மில்லியன் ஆகும். சந்தையில் காணப்பட்ட எரிபொருள் பற்றாக்குறை மற்றும் மூலப் பொருட்களின் பற்றாக்குறையினால் கொட்டஹெரகந்த வேலைகள் குறித்துரைத்த திகதியில் பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்ததுடன், 2023.03.31 | நிதிஏற்பாடு வழங்கப்பட்ட பணிகளில் திட்டமிடப்பட்ட வகையில் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | ஆம் திகதி வரையில் 80 சதவீதம் மாத்திரம் செயல் முன்னேற்றம் பெறப்பட்டுள்ளது. 2023.06.30 ஆம் திகதி வரையில் இந்த செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | |

### 3.5 பெறுகைகள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிறுவனத்தின் புதிய அலுவலகம் மற்றும் ஆய்வுகூட கட்டிடத்தின் நிர்மாண உடன்படிக்கையின் பிரகாரம் 240 நாட்களில் பூர்த்தி செய்ய வேண்டியிருந்த போதிலும், 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் 1,746 நாள் காலம் கடந்திருந்த போதிலும், நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | நிறுவனத்தின் கட்டுப்பாட்டிற்கு அப்பால் இடம்பெற்ற பல்வேறு காரணங்களின் அடிப்படையில் கட்டிடத்தின் நிர்மாண நடவடிக்கைகள் தாமதமடைந்திருந்தது. 2023 மே 31 ஆம் திகதி வரையில் அதனை திறந்து வைப்பதற்கு தேவையான சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளது. | திட்டமிடப்பட்ட பிராகரம் உடன்படிக்கையின் படி நிர்மாண நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.6 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிறுவனத்தின் சிரேஷ்ட நிலையில் 04 பதவிகளுக்காக 35 வெற்றிடங்கள் காணப்பட்டன. இதற்கிடையே பணிப்பாளர் (நிர்வாகம்) மற்றும் பணிப்பாளர் (மண் சரிவு ஆராய்ச்சி மற்றும் இடர் முகாமைத்துவம்) பதவி என்பன 2018 ஆம் ஆண்டு முதல் வெற்றிடமாக காணப்பட்டது. மேலும் சிரேஷ்ட நிலையில் 03 பதவிகள் ஆன சிரேஷ்ட விஞ்ஞானி, விஞ்ஞானி, முகாமையாளர் (தொழில்நுட்ப/ ஆய்வுகூடம்) போன்ற | பணிப்பாளர் (நிறுவனம்) பதவியில் ஈடுபட்ட உத்தியோகத்தர் 2016 ஆகஸ்ட் மாதத்தின் போது கேட்டு விலகியதன் பின்னர் 2018.01.02 ஆம் திகதி வரை மனித குடியிருப்பு திட்டம் மற்றும் பயிற்சியளித்தல் பிரிவின் பணிப்பாளர் பதில் கடமைக்காக நியமிக்கப்பட்டதன் பின்னர் இந்த பதவிக்காக நிர்வாகம் மற்றும் நிதி என்ற இரண்டு பதவிகளும் அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் அந்த பதவிக்காக இரண்டு உத்தியோகத்தர்கள் 2018 சனவரி 02 ஆம் திகதி முதல் நியமிக்கப்பட்டிருந்தனர். அதன் பின்னர் பணிப்பாளர் (நிர்வாகம்) ஆக நியமிக்கப்பட்டவர் 2018 ஆகஸ்ட் மாதத்தின் போது சேவையில் இருந்து நீக்கப்பட்டிருந்தார். பின்னர் 04 சந்தர்ப்பங்களின் போது பணிப்பாளர் (நிர்வாகம்) பதவிக்காக விண்ணப்பம் கோரப்பட்டு நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்ட போதிலும், அதற்காக | வெற்றிடங்கள் காணப்படுதல் நிறுவனத்தின் செயலாற்றலுக்கு பாதகமாக தாக்கம் ஏற்படுத்துமாயின் அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கோ அல்லது அவ்வாறில்லையாயின் பதவியணியின் உள்ளடக்கத்தைத் திருத்துவதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| பதவிகளிலும் வெற்றிடங்களின் எண்ணிக்கை 33 ஆக இருந்ததுடன், சிரேஷ்ட விஞ்ஞானி மற்றும் முகாமையாளர் பதவிகள் 04 வருடங்கள் முதல் வெற்றிடமாக காணப்பட்டது. | தகைமை உடைய ஒருவர் முன்வராமையின் காரணமாக வெற்றிடத்தை நிரப்புவதற்கு முடியாதிருந்தது. இந்த பதவியின் கடமைகளை மேவுகை செய்வதற்காக உதவி பணிப்பாளர் (நிர்வாகம்) கடமை கையளித்து பணிப்பாளர் (நிர்வாகம்) பதவிக்காக பொருத்தமான ஒருவரை நியமிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.<br>அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப்பட்ட பணிப்பாளர் பதவியான பணிப்பாளர் (LRRMD) பதவியில் ஈடுபட்ட பணிப்பாளர் 2018 ஆம் ஆண்டின் போது விடுவிக்கப்பட்டமையால் அந்த பதவியின் பதில் கடமை ஆற்றுவதற்கு சிரேஷ்ட விஞ்ஞானி ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். பின்னர் 2022.12.31 இல் அந்த பணிப்பாளர் ஓய்வுபெற்றுச் சென்றதன் பின்னர் இது வரையிலும் அந்த பதவி வெற்றிடமாக காணப்பட்டது. மனித குடியிருப்பு திட்டம் மற்றும் பயிற்சியளித்தல் பிரிவின் (HSTPD) பணிப்பாளரும் 2022.12.31 இல் ஓய்வு பெற்றுச் சென்றதன் பின்னர் அந்த பதவியின் பதில் கடமைக்கு சிரேஷ்ட விஞ்ஞானி ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார்.<br>நிதி அமைச்சின் செயலாளரால் 2019 ஆம் ஆண்டு முதல் சகல ஆட்சேர்ப்புகளையும் கைவிடுவதற்கு வழங்கப்பட்ட கட்டளையின் காரணமாக ஆட்சேர்த்தல் மற்றும் வெற்றிடங்களை நிரப்புவதற்கான சந்தர்ப்பம் காணப்படாதிருந்ததுடன் தற்போது சகல வெற்றிங்களுக்காகவும் ஆட்சேர்ப்பினை மேற்கொள்வதற்கு உள்ளக முகாமைத்துவ சபையின் பரிந்துரையின் அடிப்படையில் அரசாங்க சேவையில் ஆட்சேர்த்தல் மீளாய்வு செய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளது. அதற்காக குழுவின் அங்கீகாரம் வழங்கப்பட்டதன் பின்னர் அத்தியாவசிய பதவிகளை மாத்திரம் நிரப்புவதற்கும் மற்றும் ஆட்சேர்ப்பினை செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். ஆரம்ப நிலையில் பதவிகளுக்காக புதிய ஆட்சேர்ப்பினை மேற்கொள்ளாதிருப்பதற்கும், வெற்றிடங்களுக்காக செயலாற்றல் |

படையணியின் மூலம் பெற்றுக்கொள்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. நாட்டில் தற்போது காணப்படுகின்ற பொருளாதார நெருக்கடியுடன் நிர்மாணத் துறையின் கணிசமான பின்னடைவின் காரணமாக அது தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்திற்கும் தாக்கமளித்திருந்தமையால் புதிய ஆட்சேர்ப்பினை மேற்கொள்ளாமல் காணப்படுகின்ற பதவியணியினரை முகாமைத்துவம் செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் அது நிறுவனத்தின் நிதி முகாமைத்துவத்திற்கு தாக்கமளித்திருந்தது.